**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.19** **நாள்: 24.01.2019**

## பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் தூய்மைக்கான மதிப்பீடு–2019 குறித்த விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக தூய்மை இந்தியா திட்டம் மற்றும் தூய்மைக்கான மதிப்பீடு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய வீட்டு வசதித்துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகம் சார்பில் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் நாடு முழுவதும் உள்ள அனைத்து நகர உள்ளாட்சி அமைப்புகளில் "தூய்மைக்கான மதிப்பீடு" செய்யப்பட்டு, பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் ஒவ்வொரு நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தரவரிசை (Rank) வழங்கப்படுகிறது.

தற்பொழுது, தூய்மைக்கான மதிப்பீடு 2019 நடைபெற உள்ளது. இதில் தேசிய தர வரிசை பட்டியலில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் மேற்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 500 நகர உள்ளாட்சி அமைப்புகள் கலந்து கொள்ள உள்ளன. இதில், தரவரிசைக்கான போட்டியில் வழங்க உள்ள மொத்த மதிப்பெண்கள் ஐந்தாயிரத்தில் பொதுமக்கள் கருத்துக்கு 1250 மதிப்பெண்கள் வழங்கப்பட உள்ளன. இதுகுறித்து பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனையொட்டி, இன்று (24.01.2019) இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட அண்ணா சாலையில் உள்ள காயிதே மில்லத் பெண்கள் கல்லூரியில் பயிலும் 300 மாணவியர்கள் மற்றும் 30 ஆசிரியர்களுக்கு தூய்மை இந்தியா திட்டம், தூய்மைக்கான மதிப்பீடு–2019 மற்றும் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் கைப்பைகள் உட்பட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் குறித்து PPT மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய பொருட்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டு மாணவியர்களுக்கு விளக்கப்பட்டது. பின்னர் அனைவருக்கும் துணிப்பைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, மாணவியர்கள் அனைவரும் நோய்த்தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இச்சிறப்பு விழிப்புணர்வு முகாமில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி. சீனிவாசன், கல்லூரி முதல்வர் Dr. ஈஸ்வரி பிரபு, விலங்கியல் துறை தலைவர் Dr. சண்முகவள்ளி, பசுமைப்படை தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**